| | |
|---|---|
| வேலூர் மா.ஆ.நி<br>VELLORE DRB | கூட்டுறவுச் சங்கங்களின்<br>**மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், வேலூர்**<br>கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>சத்துவாச்சாரி, வேலூர் மாவட்டம் - 632 009. |

**விளம்பர எண். 04 /2020** **நாள். 14.04.2020**

# குறு அறிவிப்பு

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களில் (தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், கூட்டுறவு நகர வங்கிகள், பணியாளர் சங்கம் மற்றும் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி) காலியாக உள்ள 59 உதவியாளர்/எழுத்தர்/மேற்பார்வையாளர் பணியிடங்கள் மற்றும் வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் காலியாக உள்ள 105 உதவியாளர் பணியிடங்களுக்கு வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் மூலம் விளம்பர எண்.02/ 2020 மற்றும் 03/2020 இன் வழியே அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு இணைய வழியில் விண்ணப்பங்கள் சமர்பிப்பதற்கான கடைசி நாள் 14.04.2020 பிற்பகல் 5.45 மணி வரை எனக் குறிப்பிட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கரோனாநோய் தொற்றுபரவலைத் தடுப்பதற்காக இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் **வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் மூலம்** வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் **எண்.02/2020 மற்றும்** 03/2020 இன் படி உதவியாளர்/எழுத்தர்/மேற்பார்வையாளர் தேர்விற்கான இணையவழி விண்ணப்பத்திற்கான கடைசி நாள் 14.04.2020 **லிருந்து** 15.05.2020 **வரை நீட்டிக்கப்படுகிறது**. இத்தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதார்கள் 15.05.2020 **பிற்பகல்** 5.45 **வரை இணைய வழியின் மூலம் விண்ணப்பிக்கலாம்** என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட எழுத்துத்தேர்வு மற்றும் பிற விவரங்கள் தொடர்பாக விண்ணப்பதாரர்கள் "http://www.drbvellore.net" என்ற இணையதளத்தைத் தொடர்ந்து பார்வையிட தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பதிவாளர் / தலைவர்**
கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட
ஆள்சேர்ப்பு நிலையம்,
வேலூர்.